**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

**Published on 14, July-2025** **ISSN:2320-4842 (P) 3049-2688 (O)**

# தொல்காப்பியம் நுவலும் எண்வகை மெய்ப்பாடுகள்

**அ. பியூலா ரூபி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 625 018

**முனைவர் சி. சொர்ணமாலா**
நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 625 018

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் தொல்காப்பியத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. 'தொல்காப்பியம்' எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பெரும் பகுப்புடையதாக இருக்கின்றது. இதில் பொருளதிகாரத்தில் 'மெய்ப்பாட்டியல்' என்னும் இயலில், தொல்காப்பியர் எட்டு வகையான மெய்ப்பாடுகளை எடுத்தியம்பியுள்ளார். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பதாகும். இத்தகைய அனைத்தும் நான்கு உட்கூறுகள் வீதம் முப்பத்திரண்டு நிலைக்களன்களைக் கொண்ட சுவைகளெனத் தொல்காப்பியர் விரித்துக் காட்டியுள்ளார். செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகிய மெய்ப்பாடு, இலக்கியங்களில் இன்றியமையாத இடத்தை வகித்திருப்பதை ஒவ்வொரு இலக்கியங்களிலும் பார்க்க முடிகிறது. மெய்ப்பாடுகள் இன்றி இலக்கியங்கள் இல்லை என்று கூறும் அளவிற்கு அவை முதன்மையிடத்தை வகிக்கின்றன. அத்தகு எண்வகை மெய்ப்பாடுகள் குறித்துத் தொல்காப்பியம் நுவலும் முறையினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள் (Keywords):** நகை, அழுகை, இழிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை.

## முன்னுரை

ஒவ்வொரு காலகட்டத்திலும் மெய்ப்பாடானது சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர் தனது பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியலுக்கென ஒரு தனி இயலை வகுத்திருப்பதிலிருந்து அறிந்துகொள்ளமுடிகிறது. மெய்ப்பாடுகளானது ஐம்பொறிகள் வாயிலாக, அகவுணர்வுகளோடும், புறவுடற்கூறுகளோடும் நெருங்கிய தொடர்புடையனவாக அமைகின்றன. புலன்களின் இயல்பினையும், உணர்ச்சிகளின் எழுச்சியையும் அவற்றோடு புறவுடற் தொடர்பு ஆகியவற்றையும் புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இருக்குமாயின் மெய்ப்பாடுகள் குறித்தும் புரிந்து கொள்வது எளிதான ஒன்றாகும் என்பதை இலக்கியங்கள் வழி அறிந்துகொள்ள முடிகிறது. அவ்வகையில், தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் கூறியுள்ள எண்வகை மெய்ப்பாடுகள் குறித்து இக்கட்டுரை வழி எடுத்தியம்பப்படுகிறது.

## மெய்ப்பாடு – விளக்கம்

மெய்ப்பாடு என்பது மெய் + பாடு எனப் பிரிக்கப்படுகிறது. மெய் என்பது உண்மை என்றும்,

உடல் என்றும் பொருள்படும். 'பாடு' என்பது 'படுவது' ஆகும். இக்கருத்திற்கிணங்க 'மெய்ப்பாடு' என்பது உள்உணர்ச்சிகளின் மெய்ம்மை வெளிப்பாடு எனவும், உள் உணர்ச்சிகளின் உண்மையான குறிகள் புறவுடலிற்படுதல் எனவும் கோதண்டபாணி பிள்ளை கூறுகிறார்.[1]

'மெய்ப்பாடு' என்பது 'மெய்ப்படு' என்பதன் திரிந்த வடிவமாகும். 'படு' என்பது தொழிற்பெயராகும். அது 'பாடு' என நீண்டு முதனிலைத் திரிந்த தொழிற்பெயரானது மெய் + படு – மெய்ப்படு + மெய்ப்பாடு. மெய் (உடல்)+படு (தோற்றுதல்) மெய்யில் படுதல் – மெய்ப்பாடு, அதாவது உணர்ச்சி மெய்யில் (புறஉடலில்) வெளிப்படுதல் மெய்ப்பாடு எனப்படும். இலக்கண அடிப் படையில் நோக்கினால் 'மெய்ப்படுதல்' மெய்ப்பாடு என்றானமையை அறியமுடிகிறது.

## எண்வகை மெய்ப்பாடு

உள்ளத்தில் தோன்றும் குறிப்பு உடம்பில் வெளிப்படுவது மெய்ப்பாடு. பாடலில் சுவைப்பொருள் பொருட்புலப்பட்டால் தோன்றுவது; மனக்குறிப்பு புறத்தார்க்குப் புலப்படுவது என்றும் தொல்காப்பியம் குறிப்பிடப்படுகிறது. எட்டுவகையான குறிப்பு அல்லது சுவையுடையது மெய்ப்பாடு, என அறிந்துகொள்ள முடிகிறது. அவ்வகையில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை முதலியவை எண்வகை சுவைகளாகத் தொல்காப்பியரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### நகை

எண்வகை சுவைகளுள் முதலில் கூறப்படும் சுவை நகை என்பதாகும். சிரிப்பு என்பது இதன் பொருள். முறுவளித்தல், புன்னகை, பெருஞ்சிரிப்பு, அளவோடு சிரித்தல் என நகையில் பல வகையுண்டு. இதனை,

**"எள்ளல் இளமை பேதைமை மடன் என்று**

**உள்ளப் பட்ட நகை நான்கு என்ப."**

(தொல். மெய். நூற். 4)

என்கிறார் தொல்காப்பியர். பிறரை எள்ளி நகையாடும் போது சிரிப்புத் தோன்றும்; எள்ளப்பட்ட வழியிலும் நகைதோன்றும். இளமையால் பிறரை நகுதலும் பிறர் இளமை கண்டு தான் நகுதலும் இளமை எனும் பகுப்பில் அடங்கும். அறிவின்மை யால் பேதமை ஏற்படும். மடமை என்பது பெரும்பாலும் இருவகையில் கொள்ளத்தக்க தாக உள்ளது. ஒருவரது மடமைச் செயல் சிரிப்பைத் தரலாம்; பிறரின் மடமையாலும் நகை எழலாம் என்பதாக நகை என்னும் சுவை குறித்து அறிந்துகொள்ள முடிகிறது. சான்றாக,

**"புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி….."[2]**

எனும் அகநானூற்றுப் பாடலில் சினைப்பசு ஒன்று முட்ட வருவதைக் கண்ட பாணன் பயந்து, தன் மனைக்குள் ஓடிவந்ததைக் கண்டு தனக்குச் சிரிப்பு வந்ததாகத் தலைமகள் தன் தோழியிடம் கூறுமிடத்து எள்ளல் எனும் சுவை புலப்படுவதைக் காணமுடிகிறது.

### அழுகை

நகை எனும் சுவைக்கு அடுத்ததாகக் கூறப்படுவது அழுகைச்சுவை. இதனை 'அவலம்' என்றும் குறிப்பிடுவர். தொல்காப்பியர், அழுகையின் நிலைக் களன்களாக,

**"இழிவே இழவே அசைவே வறுமையென**

**விளிவில் கொள்கை அழுகை நான்கே."**

(தொல். மெய். நூற். 5)

என்ற நான்கினை வகைப்படுத்துகிறார். இளிவு என்பது பிறர் தன்னை எளியனாக இகழும் போது பிறக்கிறது. இழிவு என்பது உயிர் உள்ளிட்ட உடைமைகளை இழத்தலின் நிமித்தமாகத் தோன்றுகிறது. சலனத்தினாலும் தளர்ச்சியின் நிமித்தமும், தன்னிலையிலிருந்து தாழ்தலினாலும் அசைவு எனும் அழுகை தோன்றுகிறது. பொருள், செல்வம் இவற்றை இழத்தலினால் 'வறுமை' எனும் சுவை பிறக்கிறது. சான்றாக,

**"பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி,**

**இல்லி தூர்ந்த பொல்லா வறு முலை**

**சுவைத்தொறு அழூஉம் தன் மகத்து முகம்**
**நோக்கி."[3]**

எனும் புறநானூற்று வரிகள் குமணனின் நாட்டு மக்கள் வறுமையினால் எவ்வாறு துயருறுகின்றனர் என்பதை எடுத்துரைக்கிறது. இதில் இழத்தல் பற்றி தோன்றிய அழுகை எனும் சுவை புலப்படுவதைக் காண முடிகிறது.

### இளிவரல்

எண்வகைச் சுவைகளுள் மூன்றாவதாகக் கூறப்பட்டுள்ளது இளிவரல் ஆகும். இதனை,

**"மூப்பே பிணியே வருத்த மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே."**

(தொல்.மெய்ப்நூற்.6)

என்று வகைப்படுத்துகிறார் தொல்காப்பியர். முதுமை காரணமாக எழக்கூடிய தளர்ச்சியி னால் அடையும் மூப்பு; நோயின் மிகுதியி னால் உடலில் ஏற்படும் பிறர் அருவருக்கத்தக்கதான மாற்றம்; சில நேரங்களில் நமக்குப் பிணி உண்டாவதற்கு நாமே காரணமாகிறோம். சில நேரங்களில் பிறர் காரணமாவர். இந்த இரண்டு காரணங்களினாலும் உண்டாகும் வருத்தத்தினால் இளிவரல் என்னும் அவலத்தின் வெளிப்பாடு பிறக்கிறது. இயலாமையின் கண் மென்மைச் சுவை உண்டாகிறது. சான்றாக,

**"மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ் சான்றவர்**
**நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை"[4]**

என்னும் நாலடியார் பாடல் பிணியின் கண் தோன்றிய இளிவரல் சுவையைச் சுட்டிக்காட்டுவதைக் காணமுடிகிறது.

### மருட்கை

வியப்பு என்னும் சுவை 'மருட்கை' எனப்படுகிறது. இதனைத் தொல்காப்பியர்,

**"புதுமை, பெருமை சிறுமை ஆக்கமொடு**
**மதிமை சாலா மருட்கை நான்கே."**

(தொல். மெய். நூற். 7)

என்கிறார். இதற்கு முன்பாகக் கண்டிராத, கேட்டிராத நிகழ்வின் கண்ணும், பொருளின் கண்ணும் தோன்றுவது புதுமை ஆகும். முன்னர் கண்டிருந்த, கேட்டிருந்த பொருளோ, நிகழ்வோ அதன் அளவிலிருந்து மிகுந்து காணப்படுவது, அதனைக் கண்ட போது எழும் உணர்வின் தன்மை 'பெருமை' எனப்படுகிறது. மிக நுண்ணியன கண்டு வியத்தலின் போது சிறுமை பிறக்கிறது. ஒன்று மற்றொன்றாகப் பரிணாமம் அடையும் போது ஆக்கம் எனும் மருட்கைச் சுவை பிறக்கிறது. இவ்வாறு, புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் எனும் நான்கு நிலைகளில் மருட்கை பிறக்கிறது என்பதை அறிய முடிகிறது. இதனைப் புதுமை எனம் நிலையில்,

**"பெருந்தேர் யானும் ஏறியது அறிந்தன்று அல்லது**
**வந்தவாறு நனி அறிந்தன்றோ இலனே."[5]**

எனும் அகநானூற்று வரிகள் புதுமை எனும் நிலையில் தோன்றிய மருட்கை சுவையைப் புலப்படுத்துகின்றன.

### அச்சம்

பயம் எனும் பொருளைத் தரக்கூடிய அச்சம் குறித்து,

**அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்**
**பிணங்கல் சாலா அச்சம் நான்கே**

(தொல்.மெய்.நூற். 8)

என்கிறார் தொல்காப்பியர். அவை அணங்கு எனும் தீயவை, தன்னைத் தாக்கி வருத்தும் ஆற்றலைக் கண்டு அஞ்சும் அச்சம்; தீய விலங்குகள் தாக்கும் போது எழும் அச்சம்; பிறர் உடைமையைக் கவர்வோராகிய கள்வரைக் கண்ட இடத்து எழும் அச்சம்; அரசர், தலைவன், இறைவன் மீது கொண்டிருக்கும் அச்சம் என நால்வகை நிலையில் அச்சம் பிறக்கிறது. சான்றாக, கூற்றுவனைப் போல ஓடிவரும் யானையினைக் கண்டு அச்சமுற்று தப்பிக்க இடம் அறியாது நடுக்கமுறும் பெண்களின் நிலையினை விளக்கி நிற்கும் குறிஞ்சிப்பாட்டை இதற்குச் சான்றாகக் காணமுடிகிறது.

### பெருமிதம்

கல்வி, வீரம், புகழ்ச்சி, கொடை இந்நான்கும் மற்றவரைவிட தன்னிடம் மிகுந்து இருக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியே பெருமிதம் (தொல்.மெய்., நூற். 9)என்கிறது தொல்காப்பியம். இப்பிறவியில் செய்கின்ற தான தருமங்கள் அடுத்த பிறவியில் உதவும் என்பதற்காக ஆய் என்பவன் கொடுத்து உதவவில்லை. மாறாக நல் வழியில் வாழ்தல் வேண்டும் என்பதற்காகவும் மற்றோரும் கடைபிடித்து வாழவேண்டும் என்பதற்காகவும் கொடுக்கின்றான் என ஆய் என்பானின் கொடைத் தன்மையை

**"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்"[6]**

என்று புறநானூறு புலப்படுத்துகிறது. இதில் கொடை எனும் நிலையில் தோன்றிய பெருமிதம் இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது.

### வெகுளி

வெகுளி மெய்ப்பாடானது உறுப்பறை, குடிகொள், அலை, கொலை எனும் நான்கு நிலைகளில் பிறக்கின்றது என்பதை கீழ்க்காண் நூற்பா தெளிவுறுத்துகிறது.

'உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன
வெறுப்ப வந்த வெகுளி நான்கே
(தொல்.மெய்., நூற். 10)

உறுப்பறை என்பது உடல் உறுப்புகளைத் துண்டித்தலினால் வெளிப்படுவது. குடிகோள் என்பது நற்குடிப் பிறந்தார்க்குச் சூழும் பழி. அலை என்பது அடித்தல், தகுதிக்குரிய மதிப்புக் கிட்டாத இடத்து வெளிப்படுவது. கொலை என்பது கொல்லுதற்கு முற்படுதல். இவை நான்கும் தான் பிறருக்குச் செய்யும்பொழுதும், பிறர் தனக்குச் செய்யும்பொழுதும் வெகுளி என்னும் சினம் வெளிப்படுகின்றது என்பதை நூற்பாவின் வழி தெரிந்துகொள்ள முடிகிறது.

### உவகை

பிறர் துன்பம் கண்டு வருகின்ற உவகை, உவகை எனப்படாது என்கிறது தொல்காப்பியம். அவ்வகையில் உவகை என்பது,

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே.
(தொல்.மெய்.நூற். 11)

என்று உவகையின் நிலைக்களன்களை வரையறை செய்கிறது. பொருளுடைமையால் வரும் இன்பமாகிய செல்வம்; ஐம்புலன்களினால் பெறக்கூடிய இன்பமாகிய புலன்; புணர்ச்சி; சோலைகளிலும் ஆறுகளிலும் விளையாடும் விளையாட்டு ஆகிய நான்கினாலும் உவகை பிறக்கும் என்பதை இந்நூற்பா புலப்படுத்துகிறது.

உரனுடையுள்ளத்தைச் செய்பொருள் முற்றிய
வளமையானாகும் பொருளினது
வெண்பாய்.[7]

எனும் கலித்தொகை வரிகள் செல்வம் காரணமாகப் பிறந்த உவகைக்குச் சான்றாகிறது.

### முடிவுரை

தொல்காப்பியத்தில் நகையே, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடுகள் அதன் உட்பிரிவுகளுடன் விவரித்துக் கூறப்பட்டுள்ளன. பெரும்பான்மையான தமிழ் இலக்கியங்களில் ஏதேனும் ஒரு மெய்ப்பாடு இடம்பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அன்றாட வாழ்வில் மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவையாக இந்த மெய்ப்பாடுகள் அமைவதை அறியமுடிகிறது. எனவே, மெய்ப்பாடுகள் இல்லையெனில் இலக்கியத்தின் சுவையை மட்டுமல்ல, உயிரினங்களின் உணர்வையும் உணர்ந்து கொள்ள முடியாது என்பது இவ்வாய்வின் வழி புலனாகின்றது.

### சான்றெண் விளக்கம்

1. கோதண்டபாணி பிள்ளை, .கு., கம்பரும் மெய்ப்பாட்டியலும், ப. 8.
2. வேங்கடசாமி நாட்டார், .நா.மு., அகநானூறு, பா. 56.
3. மாணிக்கவாசன், .ஞா., புறநானூறு, பா. 164.
4. மாரீஸ்வரி, .எஸ்., நாலடியார், பா. 41.
5. வேங்கடசாமி நாட்டார், .நா.மு., அகநானூறு, பா. 384
6. மாணிக்கவாசன், .ஞா., புறநானூறு, பா. 134.
7. கோவிந்தன் ராசன், .மு., கலித்தொகை, பா. 12.

### துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், 3, ஸ்ரீ கிருஷ்ணபுரம் தெரு, சென்னை – 14.
2. கோதண்டபாணிபிள்ளை .கு., கம்பரும் மெய்ப்பாட்டியலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1995.
3. கோவிந்தன் ராசன் .மு., கலித்தொகை, இலக்கண இலக்கிய நுழைவாயில், சரசுவதி பதிப்பகம்.
4. மாணிக்கவாசன், .ஞா., புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், பரமேஸ்வரி கிராபிக்ஸ், சென்னை – 600 005.
5. மாரீஸ்வரி, .எஸ்., நாலடியார் மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், இராயப் பேட்டை, சென்னை – 600 014.
6. வேங்கடசாமி நாட்டார், .நா.மு., அகநானூறு, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 154, டி.டி.கே. சாலை, சென்னை – 600 018.